# தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, மார்கழி 10 (24-12-'60). சனிக்கிழமை | இதழ் 28


# திராவிடமே தூங்காதே!

குடியாட்சி நிலவும் ஒருநாட்டில் அயல் நாட்டினரைக் குடியேற விடுவது போன்ற "உற்பாதம்" வேறு ஒன்று மில்லை.

அவ்வாறு குடியேறும் அயல் நாட்டினர் அயல் இனத்தாராகவும் இருந்து விட்டாலோ, சொல்ல வேண்டியதில்லை, கொள்ளிக் கட்டையால் தலையைச் சொரிவது போலத்தான்.

அரசியல் விவகாரங்கள் அனைத்திலும் அந்த அந்நியர்கள் தரும் தொல்லை அளவிட முடியாதது. இதனால்தான், பாகிஸ்தான் பிரிந்த உடனே முன் யோசனையுடன் இந்துக்களை அடித்து விரட்டினார்கள் முஸ்லீம்கள். அது போலவே இந்தியாவிலிருந்த முஸ்லீம்களை அடித்து விரட்டினார்கள் இந்துக்கள்.

இந்தியா பாகிஸ்தான் கலவரங்கள் ஏற்கனவே இருந்த குடிகளைக் குடி விரட்ட எழுந்த கலவரங்கள். அதனால், அதில் அரசியல் காரணங்களைக் காட்டி கலவரங்களை ஆதரிக்க முடியாமல், அடித்து விரட்டுவது 'அநீதம்' என்றே நல்லார் பலரும் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆயினும் என்ன? அரசியல் முன் யோசனையுடன் நாட்டு நலமும் சுதந்திர எண்ணமும் வெறியாகி உருவெடுத்ததால் குடி விரட்டும் கொள்கை தடையின்றி நடந்தேறியது.

இதைப் போலவே, இலங்கையில் குடியேறி நிலைத்துப் போன திராவிட மக்களையும் அங்குள்ள சிங்கள தேசீய இன வெறியர்கள் குடி விரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் செயலை அநீதம் என்று கண்டிக்க முடிகிறதே தவிர அடக்க முடியவில்லை என்பது கண் கூடு. இன வெறியின் செயல் அது!

மற்ற நாடுகளிலெல்லாம் இன உணர்ச்சி வெறியாக மாறி அயலாரைக் குடிவிரட்டிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் திராவிடம் மட்டிலும் அயலார் கையில் அகப்பட்டிருப்பதால் இங்கே வந்தவனுக்கும் போனவனுக்கும் குடியேற்ற உரிமை தரப்படுகிறது.

கம்யூனிஸ்ட் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்த்து வெற்றிகாண முடியாமல் வெளியேறிய திபேத்திய அகதிகள் 3000 பேரை மைசூர் மாநிலத்தில் குடியேற்றுகிறது டில்லி ஏகாதிபத்தியம்.

இந்த 3000 அகதிகளும் 600 குடும்பத்தைச் சேர்ந்தவர்களாம்! இவர்கள் மைசூர் சந்தனக் காடுகளை அழித்து நகரங்களாக்கி அங்கே குடியேற்றப்படுகிறார்களாம்.

இன்னும் 50 வருடங்களில் 3000 பேரும் 12 000 பேராகி 100 வருடங்களில் பெருந்தொகையினராகப் பல்கிப் பெருகி விடுவார்கள்.

அதன் பிறகு 'திராவிடம்' என்றால் சிறுபான்மையான பல இனத்தவர் கொண்ட 'பலபட்டறை' நாடு-தனித்தியங்க முடியாத நாடு என்று ஆகிவிடும்.

அதுமட்டுமா? இன்றைய மனித வாழ்வுக்குத் தேவையான உணவு உடை போக போக்கியப் பொருட்கள் ஆகியவற்றை உண்டாக்க ஏராளமான காடுகளும் மரங்களும் தேவை. காடுகளும் மரங்களும் காலி இடமில்லாமலிருந்தால் எப்படி ஏற்பட முடியும்?

இப்படிக் காடுகளை அழித்து அயலாரைக் குடியேற்றுவதனால் மைசூர் மாநில சர்க்காருக்கு ஏற்படும் நிரந்தரமான நஷ்டம் கொஞ்சமா? அதிலும் சாதாரணக் காடல்ல, சந்தனக்காடுகள்!

இன்றைய திராவிடத்தில் ஜன நெருக்கம் அதிகமாகி விட்டது. மனித சஞ்சாரமற்ற 'காடுகள்' என்று ஒரு பகுதிகூட இல்லை.

4 கல் தூரம்கூட ஊரில்லாத காடுகளாக இல்லை. விவசாய நிலங்கள் சுருங்கி நகரங்களாக உருமாறுகின்றன.

இன்னும் 50 ஆண்டுகள் கடந்தால் விவசாய நிலங்களே இல்லாமல் ஆகிவிடுமோ என்று அஞ்சத்தக்க அளவுக்கு மக்கட் பெருக்கம் வளர்ந்து வருகிறது.

இந்த நிலைமையில் திபேத்திய அகதிகளை-மங்கோலிய இனத்தாரை மைசூரில் குடியேற்றுவது அறியாமையா? ஆணவமா? திராவிடத்தைக் கெடுப்பதற்கென்றே திட்டமிட்டுச் செய்யும் சதிச் செயலா?

டில்லி ஆணவக்காரர்களுக்கு இடமாயில்லை? வடநாட்டில் பாகிஸ்தான் அகதிகளைக் குடியேற்றுவதற்காகத் தண்டக வனத்தை அழித்து துணைக் கண்ட வரிப்பணத்தைச் செலவிட்டு வளங்கொழிக்கும் நகரங்களாகமாற்றிக் கொண்டிருக்கிறார்களே, அதே தண்டக வனத்தில் இந்த திபேத்திய மங்கோலியரையும் குடியேற்றலாமல்லவா?

தீயில் சூடுண்டா ஆறிவிட்டதா என்று காண்பதற்குக் குட்டியின் விரலை இழுத்துக் கொண்டு போய் வைத்துப் பார்க்குமாம் குரங்கு. அதுபோல தண்டகாரண்யத்தில் இனக்குழப்பம் செய்யாமல் மைசூரில் இனக்குழப்பம் செய்கிறதா டில்லி? திராவிடம் தூங்குகிறதா விழித்திருக்கிறதா என்று சரிபார்க்கிறார்களா!

இந்தக் குடியேற்றம் பற்றி மைசூர் அரசு எதுவும் கூறுதிருக்கும் போது இவர்களுக்கு என்ன? என்று எத்தர்கள் யாராவது கேட்கத் துணியலாம்.

திராவிட மாநிலங்களில் இருக்கும் பொம்மை அரசுகள் எல்லாவற்றிலும் வடநாட்டு ஏஜண்டுகள் ஆதிக்கம்! அந்த ஏஜண்டுகள் அவர்களுடைய எஜமானர்களுக்கு எதிராக வாய்திறப்பார்களா? அப்படி வாய்திறந்தால் அவர்கள் சுகபோக வாழ்வும் பதவியும் என்னாவது?

6 மாதங்களுக்கு முன்பு திபேத்தியர்களை நீல மலையில் குடியேற்றப் போவதாக டில்லி அறிவித்தது. ஆனால் தி. மு. க தலைவர்கள் ஆங்காங்கு பொதுக் கூட்டங்களில் கண்டனக் குரல் எழுப்பவே நீலமலையை விட்டு மைசூருக்குத் தாவி விட்டார்கள் போலும்!

வடவரின் எதேச்சதிகார ஆணவச் செயல் அத்தனைக்கும் வளைந்து கொடுத்து வாழும் அடிமை மந்திரிகள் தென்னாட்டில் தானே இருக்கிறார்கள்!

பெருபாரி சம்பந்தமாக வங்காளம் குமுறுவதுபோல், இங்கே - மைசூரில் குமுறவில்லையே என்று அமைதி பெறத் தேவையில்லை நாம்.

மைசூர் மக்கள் இப்போதைக்கு அரசியல் தெளிவும் விழிப்பும் அற்றவர்களாக இருக்கலாம். அதற்காக நாம் வாளா இருக்கமுடியாது.

திபேத்தியர் குடியேற்றத்தை எதிர்த்துப் போர்முரசு கொட்ட வேண்டிய கடமையும் உரிமையும் தி. மு. கவிற்கு உண்டு.

மைசூர் மாநிலத்தில் உள்ள தி. மு. கவினர் "எங்கேயோ என்னமோ நடக்கிறது நமக்கென்ன!" என்று இராமல் இது சம்பந்தமாக தலைமை நிலையத்தின் ஆதரவுடன் கிளர்ச்சிகள் தொடங்க ஆவன செய்தல் வேண்டும்.

டில்லி ஏகாதிபத்தியம் - நேருவின் சர்வாதிகார ஆட்சி - நேர்மையான கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பதில்லை. "சாதாரண விஷயங்களுக்கும் கடுமையான போராட்டம் நடத்தினால் மட்டுமே ஏதாவது கவனிக்கப்படும்" என்பதை நடைமுறையில் காட்டி வருகின்றது. ஜனநாயகத்திற்கு அத்தனை மரியாதை இந்த ஆட்சியில்!

ஆதலால், கூட்டங்களைக் கூட்டுவதாலோ, கண்டனக் குரல் எழுப்புவதாலோ, நியாயங்களை எடுத்து விளக்குவதாலோ, எவ்வித பயனும் கிடையாது இந்த அநீத அந்நிய ஆட்சியில்!

"மாசரா"

"சர்க்கார் இனிமேல் இயங்க முடியாது" என்ற நிலை ஏற்பட்டால் மட்டுமே அதை ஓர் பிரச்னையாகக் கருதுவர் இந்த இரப்பர்த் தோலர்கள்.

ஆந்திர மாநில அமைப்புக் கோரிக்கையிலிருந்து இன்று நடைபெறும் 'பஞ்சாபி சுபா' கோரிக்கைவரை நமக்குத் தரும் பாடம் என்ன? கொடிய ரௌலட் சட்டங்கள் இன்னும் உயிரோடு ஊக்கத்தோடு இலங்குவதின் பொருள் என்ன?

பெருபாரியை பாகீத்தானுக்குத் தானம் செய்து திபேத்தியருக்கு மைசூரைத் தானம் செய்வதன் தத்துவம் என்ன?

அத்தனையும் ஆணவம், அகம்பாவம், சர்வாதிகாரம், பாசிசம், கொடுமை, கொடுங்கோன்மை.

இந்த அநியாய ஆட்சியை ஒழிக்கத் திரண்டெழுந்து போராட வேண்டும் திராவிடமே தூங்காதே.

# எழுத்தாளர் திலகம்

இராம. கண்ணப்பன்.

"பூஞ்சிட்டு" வார இதழ் அலுவலகம் வழக்கம்போல் துரித கதியில் இயங்கிக்கொண்டிருந்தது. உதவி ஆசிரியர் செம்பூத்து அடுத்த இதழுக்குக் கதை எழுதுவதற்காக எண்ணத் தோட்டத்தில் கற்பனையை மேயவிட்டுக் கொண்டிருந்தார். "செம்பூத்து" என்பது அவர் எழுத்துலகத்திற்கு வந்த பிறகு சூட்டிக்கொண்ட புனைப்பெயர். லாலா கடையில் பொட்டலம் போட்டுக் கொடுத்துக்கொண்டிருந்ததுவரை அவர் பெயர் கருப்பையாவாகத் தானிருந்தது. அதன் பிறகு தான் அவர் இந்தப் பெயரை வைத்துக் கொண்டார். "லாலா" கடையில் 'லட்டு' வியாபாரம் செய்யும்போது தான் எனக்குக் கற்பனை வளர்ந்தது. என் கற்பனைகளைப் பூஞ்சிட்டு தன் இறகுகளால் வரவேற்றது. பிறகு என்னையே உதவி ஆசிரியராக ஏற்றுக் கொண்டது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நான் எழுத்தாளனானதற்குக் காரணம் லாலா கடைதான்" என்று அடிக்கடி அவர் தன்னைப் பற்றிப் பிறரிடம் சொல்லிக்கொள்வார்.

உதவி ஆசிரியர் செம்பூத்துக்கு ஏறக்குறைய நாற்பது அல்லது நாற்பத்துமூன்று வயதிற்கு மேல் போகாது. ஒடித்து மடியில் வைத்துக் கொள்ளும் நெட்டித்தட்டை போன்ற உடலமைப்பு. அவருக்குக் கருப்பையா என்ற இயற்பெயரை யார் சூட்டிப் புண்ணியத்தைக் கட்டிக்கொண்டார்களோ தெரியாது. நெருப்பை நீராட்டி எடுத்ததைப் போன்ற நிறம். நீண்ட முகத்தில் சிறுத்த விழிகள், அதனால்தான் என்னவோ கால் அங்குலக் கனத்தில் கண்ணாடி மாட்டிக் கொண்டிருந்தார். லாகிரிப் பொருள்களைக் கனவிலும் நினைக்கமாட்டார்; காட்டமான பொடியைத் தவிர. அவர் ஆசனத்திலமர்ந்து பணிபுரியும் பாணியே தனி. வார்த்தைகளில் வருணிக்க இயலாது; அது கண்கொண்டு காணவேண்டிய காட்சி.

அவருடைய எழுத்து நடையே ஒரு "தனிரகம்." சக எழுத்தாளர்களெல்லாம் அவருடைய நடையைக் கண்டு வியந்து வாய் பிளப்பார்கள். ஒரு பெண்ணின் அழகை வருணிக்க வேண்டுமானால் மயில்போன்ற ஒயிலாள்; குயில்போன்ற குரலாள்; பொன் போன்ற மேனியாள் என்றெல்லாம் வருணிக்கமாட்டார். இதுபோன்ற வார்த்தைகளை மறந்தும் உபயோகப்படுத்தமாட்டார். அவருடைய வருணிப்பே ஒரு புரட்சிகரமானதாக இருக்கும். "ஆடும் செலுலாய்ட் பொம்மைபோன்ற எழிலும், இசைபாடும் கிராமபோன் ரிக்கார்டிலிருந்து பீறிட்டுக் கிளம்பும் மெல்லிசைபோன்ற குரலும், புளிப்போட்டு விளக்கிய பித்தளைப் பாத்தரத்தின் நிறமும்..." இப்படித்தான் அவர் எழுதுவார். இப்படி அவர் எழுதி அச்சுக்குக் கொடுத்துவிட்டால், உடன் அச்சுக் கோர்ப்பவர்தான் ஓடோடி வந்து முதன் முதலில் வாழ்த்துத் தெரிவிப்பார்.

காதல் கதை எழுதுவதென்றால் அவருக்கு எட்டிக்காயைத் தின்பதைப் போல் கற்பனையெல்லாம் கசக்கும், அதனால்தானோ என்னவோ, வயது நாற்பதுக்கு மேலாகியும் திருமணம் செய்துகொள்ளாமலிருந்தார். குடும்பக் கதை, அல்லது துப்பறியும் கதை எழுதுவதென்றால் எடுத்த பேனாவைக் கீழே வைக்கமாட்டார். அதுவும் துப்பறியும் கதை எழுதுவதென்றால் அவருக்கு அடங்காத ஆசை. என்ன கதை எழுதுகிறார் என்பதை முகத்தைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.

எண்ணத்தோட்டத்தில் கற்பனையை மேயவிட்டுக்கொண்டிருந்த ஆசிரியர் செம்பூத்துக்கு திடீரெனக் கதைக்கான 'கரு'கிடைத்து விட்டது போலும். "ஆகா! அருமையான கதைக்குக் கருக் கிடைத்துவிட்டது! உருவாக்க வேண்டியதுதான்" எனப் பெருமைப் பட்டபடி பேனாவைத் திறந்தார். பேனாவிலிருந்து ஒழுகிய மை அவரது வேட்டியில் கொட்டியது.

"இந்தச் சனியன் பிடித்த பேனாவை எப்போது மாற்றுவேனோ...?" என நொந்தபடி, கசிந்த மையை தலையில் தடவிக் கொண்டு தாளில் "காம் போதி..." என்று எழுத ஆரம்பித்தார். "கடிதங்கள்..." என்று வந்து நின்றான் அலுவலகப் பையன். அதற்குள் உரிமையாளர் குரல் கொடுக்கவே கொண்டுவந்த கடிதங்களை பையன் அவர் முன்னால் போட்டு விட்டு ஓடி விட்டான். அவன் போட்ட வேகத்தில் கடிதங்களெல்லாம் கீழே விழுந்து சிதறின. "முட்டாள்" என பல்லை நறநற வெனக் கடித்தபடி கீழே குனிந்தார் ஆசிரியர். ஒரு கடிதத்தின் முகவரி அவர் கண்ணில் பட்டது. அவ்வளவுதான் - சூரியனைக் கண்ட செந்தாமரை சூடேறி மலர்வது போல் அவர் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. எல்லாக் கடிதங்களும், செம்பூத்து என முகவரியிட்டு அவர் பெயருக்கே வந்திருந்தன. அவருக்கு ஊரிலிருக்கும் தன் தாயாரிடத்திலிருந்து மட்டுமே கடிதங்கள்வருமே தவிர, வேறு எங்கிருந்தும் கடிதம் வராது. வந்ததுமில்லை. அப்படிப் பட்டவருக்கு ஒரே சமயத்தில் ஐம்பது கடிதங்களுக்கு மேல் ஒரே நாளில் வந்தால் ஆச்சரியமாக இருக்காதா என்ன! ஆவலோடு பொறுக்கிப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தார். அத்தனையும் அவர் போன இதழில் எழுதியிருந்த "ஆடியபாதம்" என்ற சோகக் கதையைப் பாராட்டி எழுதப்பட்ட கடிதங்கள். அவர் முதன் முதலில் எழுதிய சோகக்கதை அது தான். அதற்கே அவ்வளவு கடிதங்களா? உள்ளம்ஆனந்தத்தால் பந்தயக் குதிரையைப் போல் துள்ள, கடிதங்களின் வாசகங்களைச் சுவைத்துப் படிக்க ஆரம்பித்தார்.

"பிறரை அச்சுறுத்துவதைப் போல் புரு முட்டைக்கண்கள்பிதுங்கி நின்றன. கோணிப் பையைப் போன்ற வாய் தெற்கும் வடக்குமாக இழுத்துக் கொண்டது. ஆடியபாதத்தின் கால்கள் ஆடாமலே நின்றன...!" இப்படிச் சோகத்தின் உச்சநிலைக்குக் கொண்டு போய் கதையைத் திடீரென முடிப்பீர்களென நான் எதிர்பார்க்கவில்லை. என்றால் பாராட்டாமலிருக்கவும் முடியவில்லை" "பல்லநகன்".

"செம்பூத்து அவர்களுக்கு, "கற்பனைக்காக நீங்கள் பிறந்தீர்களா? இல்லை உங்களுக்காககற்பனைபிறந்ததா என்பதை முடிவு செய்ய முடியாமல் தடுமாறுகிறோம்" "கற்பனை வளர்ச்சி மன்ற நண்பர்கள்".

"நீங்கள் எழுதிய சிறுகதைகளிலேயே ஆடியபாதத்தைத்தான் சிகரமென்று சொல்லலாம். நானொரு திரைப்படமெடுக்கும் நிலையிலிருந்தால் இக்கதையைத்தான் படமாக்குவேன்" "சாவூர் ஆண்டி"

"உங்கள் பேனாவில் மையை நிரப்பிக் கொண்டு எழுதுகிறீர்களா? இல்லை சோகத்தை நிரப்பிக் கொண்டு எழுதுகிறீர்களா?" "செம்பூத்துதாசன்".

"இந்த ஒரு கதைக்காகவே உங்களுக்குப் பொன்னாடை போர்த்தலாம். குறைந்தது எட்டு ரூபாயாவதுஅனுப்புவீர்களென எதிர்பார்க்கிறோம். உடன் பதில்" "வறுமைப் பித்தன்".

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்த போது அவருக்கொரு சபலம் தட்டியது. பணத்தை அனுப்பி பொன்னாடை போர்த்த ஏற்பாடு செய்வோமா என எண்ணினார். தவறுகப் பட்டதோ என்னவோ தெரியவில்லை, உடனே சபலமடைந்த உள்ளத்தைத் தேற்றிக் கொண்டார். பாராட்டி வந்திருந்த நாற்பத்து மூன்று கடிதங்களில் நாற்பத்து இரண்டு கடிதங்களைச் சுவைத்து ரசித்துப் படித்து விட்டார். அவர் முகம் வாழைப் பழம் தின்ற சிறுவனின் முகம்போல்மலர்ந்திருந்தது. நாற்பத்து மூன்றுவது கடிதத்தை ஆவலோடு பிரித்துப் பார்வையைச் செலுத்தினார். அடுத்த கணம் அவர் அடைந்த ஆனந்தம் பிரியாவிடை பெற்றுக் கொண்டது. களை கட்டியிருந்த முகம் கருத்து விட்டது. கடிதத்தைப் போட்டு விட்டு மேசையின் மேல் தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

'முட்டாளே...!" என ஆரம்பிக்கப் பட்டிருந்த அந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன்தான் அவர் இந்நிலையடைந்தார். மறுபடியும் அந்தக் கடிதத்தை அவர் படிக்க விரும்பவில்லை. அதையெடுத்துச் சுக்குநூருக்கிக் குப்பைக் கூடையில் போட்டார். 'அறிவிலி...!' எனப்புழுங்கியபடி இதர கடிதங்களை எடுத்து வைத்துவிட்டு, முன்னால் உருவான கதையை எப்படி ஆரம்பிப்பது எனச் சிந்திக்க ஆரம்பித்தார்.

டெலிபோன் அலறியது. அலுவலகப் பையன் எடுத்தான், கேட்டான். "யார் வேண்டும்?"

'செம்பூத்து."

"சார், போன்!" என்றபடி பையன் வந்து எதிரே நின்றான். 'எனக்கா...?" என வியந்தபடி எழுந்து சென்றார் செம்பூத்து. பூஞ்சிட்டு வார இதழில் உதவியாசிரியராகப் பணியேற்று முழுசாக இரண்டரை ஆண்டுகளாகி விட்டன. இந்த நாட்களில் அவர் இரண்டு அல்லது மூன்று தடவைதான் போனில் பேசியிருப்பார்.

போனைக் காதில் வைத்துக்கொண்டு "செம்பூத்து பேசுகிறேன்..." என்றார்.

"வணக்கம். உங்கள் ரசிகை சரளா தேவி பேசுகிறேன்!"—மறுமுனையிலிருந்து குயிலினுமினிய பெண் குரலொன்று வந்தது. அவர் இதுவரை தனக்கு அறிமுகமில்லாத பெண்களிடத்தில் பேசியதே ஆபூர்வம். தன் தாயிடமும்பாட்டியிடமும் தான்பேசியிருக்கிறார். அப்படிப்பட்டவரை ஒரு பெண் திடீரென அழைத்தால்...! அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. தடுமாறியபடி "என்னங்க...!" என்றார்.

"நீங்கள் பூஞ்சிட்டு இதழில் எழுதி வரும் கதைகள் அத்தனையும் படித்திருக்கிறேன்...!"

"அப்படியா...!"

"உங்கள் நடையே தனிப் பாணி...!"

"ஆமா...!'

"உங்களுடைய எல்லாக் கதைகளையும்விட இந்த 'ஆடியபாதம்' என்ற கதைதான் என் உள்ளத்தை நெகிழச் செய்து...!"

"மகிழ்ச்சி!"

"உண்மையில் சொல்லுகிறேன்; கதை முடிவில் ஆடியபாதத்தின் நிலையைப் படித்துபோது என்னையறியாமலேயே கண்ணீர் வடிந்து விட்டது!"

"ஆமா, ஆமா, இருக்கும் இருக்கும்'

"உண்மையிலேயே நீங்களொரு பெரிய எழுத்தாளர்தான். எனக்கு வசதியிருந்தால் இந்தக் கதை எழுதிய உங்களுக்கு விமரிசையாகத் தேனீர் விருந்தே வைப்பேன்...!"

"இஹி ஹி ஹி"

"நீங்கள் மறுக்க மாட்டேன் என்று சொன்னால் நானொரு ஏற்பாடு செய்கிறேன் ..!".

"சொல்லுங்கள் மறுக்க மாட்டேன்!"

"எங்கள் வீட்டிற்கு நீங்கள் ஒரு முறை விருந்தினராக வரவேண்டும். இன்று மாலையில் என்னைச் சந்தித்தால் இருவருமே வீட்டிற்கு செல்லலம். உங்களுக்கும் தோதாகயிருக்கும்...!',

"அதற்கென்ன வருகிறேன்"

"ரொம்ப மகிழ்ச்சி! எங்கே முடியாது எனச் சொல்லுவீர்களோ எனப் பயந்தேன். நீங்கள் ஒரு ஐந்து மணி சுமாருக்கு கடற்கரையிலுள்ள காந்தி சிலையருகே வாருங்கள்; நான் காத்திருக்கிறேன். என்னைச் சுலபமாகக் கண்டுபிடிக்க அடையாளம் கையிலொரு சிவப்புப் பை வைத்திருப்பேன். என்ன வருவீர்களா...?" எனக் கேட்டு விட்டு அவள் 'டக்'கென்று போனை வைத்து விட்டாள். அவரும் சரியென்று போனை வைத்து விட்டு வந்து ஆசனத்திலமர்ந்தார். அவர் எண்ணமெல்லாம் அந்தப்பெண்ணைப் பற்றியே சுற்றி வட்டமிட்டது.

"இளம் பெண்ணாக இருப்பாளோ...? என்ன சந்தேகம்; குரல் யாழிசை போலிருந்ததே! இளம் பெண்தான். எங்கிருந்து போன் பண்ணியிருப்பாள்...? சே! வீட்டிலிருந்தென்றால் நேரே என்னை வீட்டிற்கு வரச் சொல்லியிருப்பாளே. ஏன் கடற்கரைக்குச் வரச் சொல்லுகிறாள்? ஏதாவது அலுவலகத்தில் வேலைபார்ப்பாள்; அங்கிருந்துதான் பேசியிருக்க

([illegible]-ம் பக்கம் பார்க்க)

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 24-12-'60 | இதழ் 28

# இனி அது நடக்காது

காங்கோவில் கலவரம்.

அல்சீரியாவில் அமளி.

லாவோசில் போர்.

எதியோப்பியாவில் புரட்சி.

இப்படி நாளுக்கு நாள்-நாட்டுக்கு நாடு நடைபெறத் தொடங்கியிருக்கும் போரும் பூசலும், இதிலே வல்லரசுகள் என்று சொல்லப்படுகிற பேரரசுகள் தலையிட்டுத் தங்களுக்குள் நிகழ்த்திக் கொள்கிற ஆவேசமான குற்றச்சாட்டுக்களும் உலகப் போர் வெகு விரைவில் உருவாகலாம் என்ற பயங்கர முன்னறிவிப்பைத் தந்துகொண்டிருப்பதால்—

உலக நாடுகள் அமைதியைக் காக்க வேண்டிய காரணத்தையும், ஆக்கிரமிப்பை நீக்க வேண்டிய அவசியத்தையும் சதுக்கங்களிலிருந்து சட்டசபைவரை, வழக்கம் போல இடைவிடாது முழக்கி வருகிறார் பஞ்சசீலப் பண்டிதராகிய நேரு.

தனிமனிதனின் புஜபலபராக்ரமத்தையும் புகழையும் நிலைநாட்ட-பொது மனித எண்ணங்களைப் புறக்கணித்து, சவமலைகளைக் குவிக்கும் ரணகளங்களை உற்பத்தி செய்யும் சர்வாதிகார வெறியர்களை, ஜனநாயகப் பண்புபடைத்த சமாதான விரும்பிகள் கண்டித்துக் குரலெழுப்ப வேண்டியது முறையே-சரியே,

ஆனால், வார்த்தெடுத்த சர்வாதிகாரப் போக்கும், வடித்தெடுத்த எதேச்சதிகாரத் தன்மையும் நிரம்பிய நேரு-

யாரையும் எவனையும் எதையுங் கேளாது, இந்திய மண்ணையே அடுத்த நாட்டுக்காரனுக்குத் "தானம்" வழங்கும் ஆணவமும் மமதையும் படைத்த பண்டிதர்—

இன்று இந்தியாவிற்குள் உருவாகியிருக்கும் பல குழப்பங்களுக்கும் கலவரங்களுக்கும் தானே மூலகாரணமாக இருந்து கொண்டு, இங்கே உருவாகி இருக்கும் குழப்பங்களைத் தீர்ப்பதற்கு வக்கின்றி வகையின்றி, அடுத்த நாட்டின் அமைதிக்காகப் பாராளுமன்றத்திலே பலமணி நேரம் பேசித்தனது பஞ்ச சீலப் பக்தியைக் காட்டிக் கொள்கிறார்.

ஆனால், உண்மையிலேயே இன்றையஇந்தியாவின் குழப்பத்திற்கும் அமைதியின்மைக்கும் காரணமாயிருக்கும் ஒரே மனிதர் யாரென்றால் அது நேருவைத் தவிர வேறு யாருங்கிடையாது.

தன் சொந்த நாட்டின் அமைதியைக் கட்டிக் காக்கும் அருகதையற்ற இந்த நேருதான், இன்று அகில உலக சமாதானத்தின் அவசியங் குறித்து மிக மிக அக்கரையுடன் பேசுகிறார்.

வெட்கம்! வெட்கம்!

காஷ்மீர் பிரச்சனையில் இவர் "ஜம்பம்" சாயவில்லை. கோவா மீதுள்ள 'தாவா'வைத் தீர்க்க இவரால் முடியவில்லை. இலங்கை இந்தியர் தகராறுகள் பற்றிய அக்கரை இவருக்கில்லை.

இவர் ஆட்சியில், அகிம்சை முறையில் நியாயங்களைப் பெறமுடியாது என்று தெளிவாகத் தெரிந்து கொண்ட நாகர்கள்-இந்தியராணுவத்தையே ஆயுதந்தாங்கி அடித்து விரட்டிக் கொண்டிருக்கின்றனர்.

"பஞ்சாபிசுபா" கேட்கும் சீக்கியர்கள், சிறைச்சாலைகளில் நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் போராட்டத் தலைவரான சாந்த் பேடாசிங் பஞ்சாபி சுபாவைப் பெறுவதற்காக உண்ணுநோன்பிருந்து கொண்டிருக்கிறார். இதற்கிடையில் இவரின் அலட்சியத்தாலும் ஆணவத்தாலும், வங்கம் தனது அங்கமாகிய பெருபாரியை இழக்கத்தான் வேண்டுமென்கிற முடிந்த முடிவை, இவரின் சுட்டுவிரல் அசைவுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் தில்லிப் பாராளுமன்றம் வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டது.

இந்த முடிவைத் தொடர்ந்து பாராளுமன்றத்திலே பேசிய பண்டிதர், "பெருபாரி ஒப்பந்தம் ஏற்பட்ட சமயத்தில், பெருபாரி பிரதேசத்தின் ஜனத்தொகையின் தன்மைபற்றி (பெரும்பாலோர் இந்துக்களே) எனக்குத் தெரியாது. பிறகு மற்றொரு முக்கியமான விஷயம் எனக்குத் தெரிய வந்தது. பெருபாரி மக்களிற் பலர் பாகிஸ்தானிலிருந்து ஓடி வந்த அகதிகள். அவர்களை மீண்டும் குடி பெயர்ப்பதுபற்றி நான் மிகவும் மனவேதனை அடைந்தேன்."

இந்திய அரசியலில் பரபரப்பை உருவாக்கிவிட்ட பெருபாரியைப் பாகிஸ்தானுக்குக் கொடுத்துவிடுவதென்று பாராளு மன்றத்திலே திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, நேரு சொல்கிறார்;

பெருபாரி ஒப்பந்தத்தின்போது நான் பெருபாரியைப்பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. அங்கே இருப்பவர்களில் பெரும்பாலோர் பாகிஸ்தானத்திலிருந்து அகதிகளாக வந்து குடியேறியவர்களாம்-ஐயோ பாவம் நான் வருந்துகிறேன்-என்று.

சரியாகத் தெரியாமலும் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்காமலும் ஜனநாயகத்தை மதிக்காமலும் நேரு என்னும் ஒரு தனி மனிதர் செய்த சர்வாதிகாரத்தின் விளைவு—

இது நாள்வரை வங்கத்தின் அங்கமாக இருந்த வந்த பெருபாரி அடுத்தவனுக்கு அடிமையாக விற்கப்பட்டுவிட்டது.

ஆனாலும், பெருபாரியை ஒரு போதும் கொடுக்கமாட்டோம்-இழக்கமாட்டோமென நேருவுக்கு எதிராக வங்கம் முழுவதுமே போர்க் கொடியேந்தி நிற்கிறது.

எந்த நேரு உலகத்திற்கு அமைதியைப்பற்றிப் போதனை செய்கிறாரோ அந்த நேருவால்தான் வங்கம் இன்று அமளிப்படுகிறது என நாடு நன்கறிந்து கொண்டது.

இந்தியாவின் அமைதியும் முன்னேற்றமும், நேரு என்கிற புகழ் வாய்ந்த தனி மனிதர் ஒருவராலேயே கட்டிக் காக்கப்படுகிறதெனக் கனவு கண்ட பல "பக்தி" உள்ளங்கள்கூட, இந்தப் பெருபாரிப் பிரச்னையில் விழித்துக்கொண்டன.

இனி,

சர்வாதிகார நேருவால் சமாதான நாடக மாட முடியாது.

அதற்கு வழியில்லை, அது நடக்காது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்...! ஏன் என்னைக் கடற்கரைக்கு வரச் சொன்னாள்? என்மேல் அவளுக்கு?...இருந்தால்தான் என்ன-அவளையே நாமும் திருமணம் செய்து கொண்டால் போகிறது'" இப்படித் தனக்குத்தானே வினாவையும் எழுப்பி விடையையும் போட்டுக் கொண்டார். அவளையே பற்றிய இன்ப நினைப்பில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தார். அவர் கற்பனையில் எழுந்து மானசீகமாக உருவான அற்புதமான கதை எழுத்து வடிவம் பெறாமலே நின்றது. அதற்குப் பதிலாக அவளுடன் எப்படிப் பேச வேண்டுமென்று தயார் செய்து கொண்டார். எப்போது மணி ஐந்தடிக்கும் என கடிகாரத்தின் பக்கமே பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தார்,

அப்பாடா! மணி ஐந்தடித்து விட்டது.

கூடிய மட்டும் தன்னை நன்றாக அலங்காரம் செய்துகொண்டு, பஸ் ஏறி நேரே கடற்கரைக்குச் சென்றார்.

மாலைப்பொழுது. அவர் பாணியில் சொல்ல வேண்டுமானால்; சீமை அலுமினியத்தட்டை நிழலில் வைத்துப் பார்த்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது வானம். குறைந்த அளவில் மின்விசிறியை இயக்கினால் எப்படிக் காற்றுவருமோ அதைப்போல் தென்றல் வீசிக்கொண்டிருந்தது. பழுதடைந்த வானொலி எப்படி அலறுமோ அப்படி அலறிக்கொண்டிருந்தது கடல்.

செம்பூத்து, காந்தி சிலை வைத்திருக்கும் இடத்தை நோக்கி வேகமாக நடந்தார். அவர்வாய் அந்தப் பெண்ணோடு எப்படிப் பேச வேண்டுமெனத் தயார் செய்து வைத்திருந்ததை நெட்டுருப் போட்டுக் கொண்டிருந்தது. வந்து போய்க் கொண்டிருந்த பெண்களை எல்லாம் வெறிக்க வெறிக்கப் பார்த்தார். பார்க்கும் பெண்களை எல்லாம் அருவருப் போடு பார்த்தார். "சாயம் பூசிய உதடும், மை தடவிய கண்களும் பவுடரப்பிய முகமுமாகவா அவளிருப்பாள்? சே! அவளுக்கு இவர்கள் ஈடாக முடியுமா?"—அவளைப் பற்றி மானசீக எடை போட்டுக் கொண்டு நடந்தார்.

வந்துவிட்டார். காந்திசிலை இருக்குமிடத்தையடைய இன்னும் பத்தடி தூரமே பாக்கி! அவர் நடை ஏனோ தடைப் பட்டது. நின்று கூர்ந்து பார்த்தார், கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தார். அவர் தலை ஏனோ சுற்றுவதைப் போலிருந்தது. மேலும் நின்றால் மயக்க மடைந்து விடுவோமோ என்ற எண்ணத்தில் திரும்பி பஸ் நிற்கும் இடத்தை நோக்கி ஓடினார்.

சீவிச் சிங்காரித்து கையில் சிவப்புப் பை ஊசலாட நின்று கொண்டிருந்தாள் ஐம்பது வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு 'குமரி.' ஏன் அந்த மனிதன் அப்படி ஓடுகிறான்என்று புரியாமல் அவள் விழித்துக் கொண்டு நின்றாள்.

இரவு சோர்ந்து போய் அலுவலத்திற்கு வந்த செம்பூத்து, ஓவியரிடம் "எண்ணத்தில் மண்" என்ற அடுத்த இதழில் தான் எழுதப் போகும் கதைக்குத் தலைப்பெழுதச் சொல்லிவிட்டுப் போனார்.

## வெண்பாப் போட்டி 12.

★

ஈற்றடி

**கோதுமை தந்த குணம்.**

இறுதி நாள் 7-1-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

# முடிவின் தொடக்கம்

கண்ணதாசன்

[3]

அவர்கள் நால்வரும் அவள் அருகிலேயே வந்தார்கள்.

பேச நினைத்தார்கள்; பேச்சு வரவில்லை.

அவளோ, அவர்களை ஏற்கனவே பார்த்திருப்பவள்போல் நின்றாள்.

"வாருங்கள்! உங்களை நான் எதிர்பார்த்தேன்" என்றாள்.

"கேளுங்கள்! உங்களுக்குச் சொல்லவேண்டியது பாக்கியிருக்கிறது" என்றாள்.

மலைமுகட்டைத் தொட்டுக்கொண்டு போகும் இளங்காற்று அவளது வெள்ளை உடையையும், விரித்த கருங்கூந்தலையும் அசையவைத்து ஓடிக்கொண்டிருந்தது.

கறந்து வைத்த பாலைப்போன்ற களங்கமற்ற முகம், இறுதி உலகத்தைக் கண்டு திரும்பிவந்த உள்ளம்போல் அமைதியாக இருந்தது.

"நீ அழகாக இருக்கிறாய்!" என்றொருவன் சொன்னான்.

"அழகை ரசிக்கக்கூட உங்களால் முடிகிறதா" என்றவள் கேட்டாள்.

"பெண்மை இனிமையானது; சுவையானது" என்றொருவன் சொன்னான்.

"அது இருதயத்தில் மென்மை படைத்தவர்களுக்கல்லவா தெரியும்" என்றாள் அவள்.

"வாழ்க்கையில் சுகத்தை அநுபவித்துக்கொண்டே இருக்க வேண்டும்" என்று இன்னொருவன் சொன்னான்.

"சுகம் கிடைக்காதபோது தானே இது தோன்றுகிறது" என்றாள் அவள்.

"உலகத்தில் பெண்ணே பெரியவள்" என்றொருவன் கூவினான்.

"உங்கள் ஏவுகணைகளை விடவா?" என்றவள் கேட்டாள்.

"நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று நால்வரும் ஒரே சமயத்தில் சொன்னார்கள்.

"கனவான்களே! இப்படி உட்காருங்கள். உங்களில் ஒருவரை மணந்துகொள்ளவே நான் ஆசைப்படுகிறேன். உலகத்திற்கோர் புதிய தலைமுறை வேண்டுமென்பதே என் விருப்பம். ஆனால் உங்களில் ஒருவர், யாரந்த ஒருவர் என்பதை நீங்களே முடிவு கட்டிக்கொள்ளுங்கள்."

அவள் சுருங்கச் சொல்லி முடித்தாள்.

அங்கே மீண்டும் ஒரு கெடுபிடி யுத்தம் தொடங்கிற்று.

அடிதடியும் நடந்தது.

அவள் சிரித்தாள்.

"போட்டி என்பதும் பொறாமை என்பதும், ஆத்திரமென்பதும் அவசரமென்பதும் — ஆசையென்னும் தாய் பெற்றெடுத்த குழந்தைகள்.

உலகம் முழுவதையும் அழித்த நீங்கள்—அந்த ஆசையையும் சேர்த்து அழிக்க மறந்துவிட்டீர்கள்.

போகட்டும்—

நான் சொல்லுகிற குணங்கள் உள்ள ஒருவர் எனக்கு மாலையிடலாம்.'

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஒருவன் துள்ளிக் குதித்தான்.

"நான் நினைத்தால் உனக்கு எதை வேண்டுமானாலும் கொண்டு வந்து தருவேன்" என்றான்.

மற்ற மூவரும் அதையே சொன்னார்கள்.

அதாவது,—

"நான் நினைத்தால்"

அவள் சொன்னாள்,

"பெரியவர்களே! நீங்கள் நினைக்காதீர்கள், நீங்கள் நினைத்ததனால் தான் உலகம் அழிந்தது-

உங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது மற்றவர் சொல்வதைக் கேட்டுப் பழகுங்கள்.

இப்போது நான் சொல்லுகிறேன் கேளுங்கள்,

சர்வவல்லமை படைத்த சர்வாதிகாரிகளே!

கண்ணுக்குத் தெரியாத அணுவைக் கொண்டு, காலங்களையே மாற்றியமைத்து விட்ட வீரர்கள் நீங்கள்.

உங்களில் யார் தன் இருதயத்தைக் கையில் எடுத்து என் கண்களுக்குக் காட்ட முடியுமோ, அவர் எனக்கு மாலையிடலாம்."

அவர்கள் விழித்தார்கள்.

"இருதயத்தைக் கையிலெடுப்பதாவது - இது நடக்கக் கூடியதா?" என்றொருவன் கேட்டான்.

"நியாயமே-

உங்கள் இருதயம், உங்கள் கைகளிலே இருந்து உங்கள் கண்களிலே தெரிந்து கொண்டே இருந்திருந்தால்; உலகமும் அழிந்திருக்காது, நீங்களும் ஒருத்தியைத் தேடி அலைந்திருக்க மாட்டீர்கள்.

ஆனால்-

உங்கள் வல்லமையில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது.

சந்திரமண்டலத்திற்குப் போக முயன்று, இருந்த மண்டலத்தையும் எரித்தவர்களல்லவா நீங்கள்.

உங்களால் முடியும்.

உங்களுக்கு நான் தேவையென்றால், உங்கள் இருதயத்தின் சதைவடிவம் என் கைகளுக்குக் கிடைக்க வேண்டும்?

"இருதயத்தைக் கையிலெடுத்தால்நான்இறந்து விடுவேனே!" என்று ஒருவன் பரிதாபகரமாகக் கேட்டான்.

"அதனாலென்ன-சாவு என்பது அவ்வளவு பயங்கரமானதா?" என்று அவள் கேட்டாள்.

"ஐயோ-அதை நினைத்தாலே பயங்கரமாக இருக்கிறது." என்றான் அவன்.

அவள் சிரித்தாள்.

"ஒரு உயிர்-ஒரே உயிர்.

அதுபோய் விடுமோ என்று பயம் வருகிறது. கூட்டம் கூட்டமாக, குவியல் குவியலாக உயிர் ஓடிக் கொண்டிருந்த பொழுது, கனவான்களே! உங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

தன்னுடையதென்று கருதும் போது, தலைமயிருக்குக் கூட மரியாதை கிடைக்கிறது.

அடுத்தவர்களுடையது என்று சொல்லும் போது 'ஆவி'கூடக் காற்றாகக் கருதப்படுகிறது.

தன்னைப் பற்றியே சிந்தித்துச் சிந்தித்து அந்தச்சிந்தனையை உடற்பழக்க மாகவே ஆக்கி விட்டீர்கள்.

உங்கள் உடம்பிலே காயம் படும்வரை, காயம் பட்டால் உடம்பு வலிக்கும் என்பதை நீங்கள் அறிந்ததில்லை.

உங்கள் ஏகாதிபத்திய எண்ணங்களாலே இயற்கையின் பொது நியதி கூட உங்களுக்கு மறந்து போய் விட்டது.

உங்களுக்கும் சாவுவரும் என்பதை நீங்கள் ஒருபோதும் சிந்தித்ததில்லை, சாவை விநியோகிக்கும் பொறுப்பு உங்களிடமிருந்ததால்.

கனவான்களே!

இன்பமயமான உலகத்தில் பயங்கரமான அமைதி உலவிக் கொண்டிருக்கிறது.

உலகம் எங்கிருந்து புறப்பட்டதோ அங்கே வந்து சேர்ந்துவிட்டது.

மனிதர்கள் எங்கிருந்து புறப்பட்டார்களோ அங்கே போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

இயற்கை ஒரு முட்டாள்தனத்தைச் செய்துவிட்டது.

உயிரோடு இருக்கும் பெண்கள்தான் பிரசவிக்க முடியும் என்ற நியதியை வைத்துவிட்டது.

எதிர்காலத்தில் உங்களைப்போன்ற வீரர்கள் தோன்றுவார்கள் என்பதை அறிந்து பிணங்களும் பிரசவிக்கும்படி ஒரு ஏற்பாட்டை அது செய்திருக்கலாம்.

இல்லையென்றால், தலைவர்களே!

உங்கள் வயிற்றிலும் கரு வளரும்படி ஒரு வழியை அது காட்டியிருக்கலாம்.

அல்லது, இயற்கை மறைத்த பொருள்களையெல்லாம் வெளியில் கொண்டுவந்த நீங்களாவது — இயற்கைக்கு இதை நினைவுபடுத்தியிருக்கலாம்.

எப்படியோ—உங்கள் தீவிரத் தன்மையில் உலகம் முடிந்து கொண்டிருக்கிறது.

எந்த மதத் தர்மமும் இதிலிருந்து உலகத்தை மீட்டுவிட முடியாது.

உங்களில் ஒருவருக்கு நான் மாலையிட்டால் - என்மூலம் ஒரு பிள்ளை எதிர்காலத்திற்குக் கிடைக்கக்கூடும்.

ஆனால், அந்தப் பிள்ளை யாருக்கு மாலையிடுவான்.

அதற்கும் ஒரு பெண்ணை நானே பெறவேண்டியதிருக்கும்.

சகோதர தர்மம்! சகோதர தர்மம் என்று வாய் கிழியப் பேசிக் கொண்டிருந்தீர்களே—

அது சகோதரியின் பதி தர்மமாக ஆரம்பமாகிவிடும்.

அது சரிதானு முறைதானு என்பதையெல்லாம் சிந்திப்பதற்கு வாய்ப்பே இருக்காது.

காலங்களால், சகோதரியை மணப்பதும் ஒரு முறையாக மாறிவிடலாம்.

ஆனுல் எப்படியும்,

அழிந்துபோன உலகத்தின் திட்டவட்டமான நடைமுறைகள்—பண்பாடுகள் மறுபடியும் உருவாகப் பல நூற்றுண்டுகள் பிடிக்கும்.

மூலம் தெரியாத அளவுக்குப் பரம்பரை வளர்ந்த பிற்பாடு தான், காதலில் உயிரோட்டமே ஏற்படும்.

அதுவரை, தாய்ப் பசுவை அறியாது காளே விரட்டுவது போல், தனி மனித வாழ்க்கையில் ஒரு காட்டிமிராண்டித்தனமே உயிரோடு இருக்கும்.

கற்கால மனிதன் தன்னே அறிந்துகொள்ளாமல் தவறுகள் செய்தான்.

வருங்கால மனிதர்கள், அவற்றை அறிந்தே செய்யவேண்டிய திருக்கும்.

உலகம் அழியாமலிருந்தபோது, சட்டப்படி எவை எவை குற்றங்களாகக் கருதப்பட்டனவோ, அந்தக் குற்றங்கள் புதிய உலகத்தின் தர்மங்களாக ஆரம்பமாகும்.

நிர்வாணமாயிருப்பது தவறு என்று அறிந்துகொண்டே மனிதர்கள் நிர்வாணமாயிருப்பார்கள்.

தாண்டமுடியாத கட்டத்தில், அருவருப்பும் ஆபாசமும் ஒரு வகைக் கலேயாக மாறிவிடும்.

இவற்றையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களோ என்னவோ ?

எண்ணிப்பார்க்கக்கூடிய இருதயம் உங்களுக்கு இருந்ததோ என்னவோ ?

இனி நடக்கப்போவது இதுதான்.

குடியிருப்பதற்கு ஒரு வீடு கட்டக்கூட இனி உங்களுக்குத் தெரியாது.

யாரோ கட்டிக்கொண்டிருந்தார்கள்.

அந்த வேலே உங்களுக்குச் சாதாரணமாகத் தெரிந்தது.

கற்றுக்கொள்ள மறந்துவிட்டீர்கள்.

உங்களுக்குப் பசியெடுக்கும்போது உணவு வந்திருக்கும்.

அந்த உணவு என்பது அரிசியிலுைனது என்பதையும், அரிசி என்பது நெல்லில் இருப்பது என்பதையும், நெல் என்பது பலபேர் ஓடி ஆடி உழைத்ததிலிருந்து வந்தது என்பதையும்—நீங்கள் அப்போது நினைத்திருப்பதற்கில்லே.

சட்டையிலே கறைபட்டிருந்தால் சத்தம் போட்டிருப்பீர்கள்.

சட்டை செய்வது எப்படி என்பதைக் கற்றுக்கொண்டிருக்க மாட்டீர்கள்.

தேவைக்கு மேலே பொருளும், திறமைக்கு மேலே புகழும் கிடைத்துவிட்டால், பார்வையில் படுவதெல்லாம் சாதாரணமான தாகத்தான் தோன்றும்.

ஆசைகளால் உண்டாக்கப்பட்ட உலகத்தை, அரசியலால் கொன்று தீர்த்துவிட்டீர்கள்.

ஏதோ ஜனநாயகம் ஜனநாயகம் என்று நீங்கள் பேசிக் கொண்டிருந்ததாக நானும் கேள்விப்பட்டேன்.

அந்த ஜனநாயகம் உங்கள் தலே முறையில்தான் உருவானது என்று வேறு நீங்கள் சொல்லிக் கொண்டிருந்தீர்களாம்.

அந்த ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகத்தான் நீங்கள் சண்டைபோட்டுக் கொண்டதாகக் கூடக் கேள்வி.

ஒரு வழியாக ஜனத்தொகையை நான்காகச் சுருக்கிக் கொண்டதன் மூலம் - நீங்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்றி விட்டீர்கள்.

இனி நீங்கள் பறந்து பறந்து ஜனநாயகத்தைக் காக்க வேண்டியதில்லே. பார்வையிலேயே காத்துக் கொள்ளலாம்.

ஆனுல் கனவான்களே !

உலகத்தின் முதல் அரசியலே ஜனநாயகம் தான் என்பது உங்களுக்குத் தெரியுமோ என்னவோ ?

கட்டுப்பாடின்றிக் கிடந்த கற்காலத்து மக்கள்-தங்களுக் கென்று தாங்களே ஒரு தலேவனேத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அரசியலே ஆரம்பித்து வைத்தார்கள்.

அதுதானே நேற்றுவரை நீங்கள் சொல்லிக் கொண்டிருந்த ஜனநாயகம்.

உங்களுக்குக் கிடைத்தது போலவே, தேவையை மீறிய பொருளும், திறமையை மீறிய புகழும் அந்தத் தலேவனுக்குக் கிடைத்ததால்-

ஜனநாயகத்தின் பேரால் ஒரு சர்வாதிகாரம் உருவாயிற்று.

சர்வாதிகாரம் உச்சகட்டம் போய்ச் சேர்ந்ததும், கொதித்தெழுந்த மக்களால் இரண்டாவது ஜனநாயகம் உருவாயிற்று.

இரண்டாவது ஜனநாயகத்தில் ஏமாளிகளும் கோமாளிகளும், அயோக்கியர்களும் மூடர்களும், ஆட்சிக்குப் போட்டி போட ஆரம்பித்ததால்,

அதே ஜனநாயகத்தின் பேரால் உங்கள் சர்வாதிகாரம் ஆரம்பமாயிற்று.

இனி, புதிய ஜனநாயகத்திற்குக் குழந்தைகள் வேண்டும்.

உங்களுக்கு ஒரு பெண் வேண்டும்.

அதற்குக் குறைந்த அளவு ஒரு சோதனே வைக்கிறேன்.

இதோ இந்த மலேக்குன்றுகளில், நான்கு கரிய குன்றுகளே நால்வரும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவர் தான் செய்தபாவங்களே மன்னிக்கும்படி எழுதுங்கள்.

அதில் யாருடைய மன்னிப்புக்கோரிக்கை, எனக்குச் சரியென்று படுகிறதோ அவருக்கு நான் மாலேயிடுகிறேன்."

நால்வரும் துள்ளிக் குதித்தார்கள்.

காய்கனி கிழங்கு கந்த மூலங்களே உண்டார்கள்.

ஆளுக்கொரு கரித்துண்டைக் கையில் எடுத்துக் கொண்டார்கள்.

எழுதப் புறப்பட்டார்கள்.

**(தொடரும்)**

# இன்றே நீ

**புலவர் பொன்னிவளவன்**

மாலே இளந்தென்றல் மலருடலேத் தொடநடந்து
ஒலே படபடக்கும் உயர்தென்னஞ் சோலேக்குள்
சோலேப் பசுங்கிளியே! சுடர்விளக்கே! நீவந்தாய்
பாலேநடுச் சோலேயினேப் போன்றவளே! கேளடிநீ!

இடையினிலே குடமேந்தி இன்சுவைநீர் நீயேந்தி
நடைபோட்ட நிலேவிழியில் நான்ஏந்தி நின்றிருந்தேன்
மடையனமே! வாய்திறந்து மணிமொழிநீ தந்தாயா?

கல்லூரி மணிஒலிக்கும் காலேயிலே தோழியர்கள்
எல்லோரும் புடைசூழ ஏகினேநீ! பார்த்திருந்தேன்
மெல்லியலே! வாய்திறந்து மென்மொழிநீ தந்தாயா?

மற்றொருநாள் திரைப்படத்தை மற்றவர்கள் பார்த்திருக்கச்
சுற்றம் மறந்துனது சுவைமுகத்தைப் பார்த்திருந்தேன்
முற்றியதே மாங்கனியே! மொழிகளேதும் தந்தாயா?

இன்றே நீ

செங்கமலப் பூப்போன்ற செவ்வாய் திறந்திடடி!
இங்கெனக்கு இன்மொழிகள் ஈந்திடடி- பொங்குசுவை
முத்தம் கொடுப்பாய் முழுநிலவே! என்னுடைய
சித்தம் களித்திடவே செய்.




# பல்லவர் கோன் புகழ் நந்தி

தேனருவி-தியாகன்

**ஆர்வத்தோடு கவிதை கேட்க அழைத்த அல்லியின்** உள்ளத்தை-''நாடாளும் நமது நாட்டியக் கணிகை ஒருவளுக்குப் பிறந்த நயவஞ்சகன்'' என்று கூறிக் குழப்பமடையச் செய்துவிட்டுப் போய்விட்டான்; காடவன் என்னும் நாடோடிக் கவிஞன் ஒருவன். அவன் சென்ற சிறிது நேரங் கழித்துத்தான் அவன் கையிலே கொண்டு வந்த ஓட்டுச் சுவடியை தன் வீட்டிலேயே வைத்து விட்டுப் போனதைக் காண்கிருள் அல்லி. சுவடியை எடுத்துப் பிரித்த அவள், அதிலுள்ள பாடல்களனைத்தும் நந்தியின் மீது பாடப்பட்டிருப்பதைக் கண்டதும் அதை இனிமையாக இசை கூட்டிப் பாட ஆரம்பிக்கிருள். அல்லி பாடிய பாடல், நந்தி மன்னன் மீது அறம் வைத்துப் பாடுகின்றவன் யாரென்பதைக் கண்டு பிடிக்க-வீரர் சிலரோடு மாற்றுடையில் சுற்றிக்கொண்டிருந்த அமைச்சர் காதில் விழுந்துவிடுகிறது. அவர் அவசரத்துடன் அல்லியின் இல்லத்திற்குள் நுழைகிருர்.

## காட்சி 4.

ஏட்டுச் சுவடியைக் கையில் வைத்துக்கொண்டு பாடிக்கொண்டிருக்கிருள்.

அல்லி:— புலஅரசைப் புறங்கண்ட புகழ்சேர்கோவே
பூவலயம் தனிக்கரியாய் நின்றமன்னு
சொலஅரிய திருநாமம் உனக்கேஅல்லால்
சொல்ஒருவர்க் கிசையுமோ தொண்டைக்கோவே.

அமைச்சர்:—பாடாதே நிறுத்து...

அல்லி:—(அதிர்ச்சியுற்று) என்ன இது ?

அமைச்சர்:—யாரைக் கேட்கிருய் ? பாடியது நீதானே ?

அல்லி:—ஆமாம்...

அமைச்சர்:—இது என்ன என்று தெரியாமலா பாடினுய் ? ஏட்டைக் கொடு இப்படி.

அல்லி:—ஏன் ? எதற்கு ? யார் நீங்கள் ?

அமைச்சர்:—நாடகமா ஆடுகிருய்-பெண்ணே-நாட்டியக் கணிகைகள் எவ்வளவு சாகச வித்தைகள் கற்றவர்கள் என்பதை நன்கறிவேன் நான். நீ பாடிய பாடல் நானிலக்காவலனும் நந்திவர்மனைக் கொல்வதற்காகவே நச்செழுத்து வைத்துப் பாடப்பெற்றது என்பதும் அது உனக்குத் தெரியுமென்பதும்-எனக்குத் தெளிவாகத் தெரியும். அரச துரோகத்திற்காக உன்னை நான் கைது செய்கிறேன்.

அல்லி:—என்னைக் கைது செய்ய நீங்கள் யார் ? நான் என்ன தவறு செய்தேன் ?

அமைச்சர்:—நீ கேட்கின்ற கேள்விகட்கு நான் அளிக்கின்ற பதில்களால் தீர்க்கின்ற வழக்கல்ல இது. உன்னை மன்னரே விசாரிப்பார். அப்பொழுது நீ கேட்க வேண்டியவைகளைக் கேள்-சொல்ல வேண்டியவைகளைச் சொல். (வீரர்களைப் பார்த்து) இவளை எச்சரிக்கையோடு அரண்மனைக்குக் கொண்டு வாருங்கள்.

[அல்லி, அரண்மனை வீரர்களால் கைது செய்யப்பட்டு, அழைத்துச் செல்லப்படுகிருள்.]

## காட்சி 5.

நந்தியின் அரசவை.

அமைச்சர்:—அரசே, தங்கள் ஆணைப்படி உங்கள் மீது அறம் வைத்துப் பாடப் பெற்ற பாடலைப் பாடிக்கொண்டிருந்த ஆட்டக்காரி ஒருவளைக் கையுங் களவுமாகக் கண்டுபிடித்துக் கைது செய்துகொண்டு வந்திருக்கிறேன்.-யாரங்கே கொண்டு வாருங்கள் அவளை.

[அல்லி அரசவைக்குள் நுழைகிருள். அவளைக் கண்டதும் அதிர்ச்சியடைகிருன் நந்தி]

நந்தி:—என்ன ? அமைச்சரே...நீங்கள் கைது செய்தது ?...

அமைச்சர்:—இவளைத்தான் அரசே-செவ்வல்லி என்பது இவள் பெயர். நாட்டியமாடுவது இவள் தொழில். ஆளை வீழ்த்தும் அழகு படைத்த இவள்தான்-அரசரை வீழ்த்தும் சதிக்கு எவனே ஒருவனுக்கு உடந்தையாக இருக்கிருள்.

நந்தி:—அமைச்சரே...?

அமைச்சர்:—கேளுங்கள் அரசே...இந்த ஏட்டில் இருக்கும் பாடல்கள் எல்லாமே உங்களைப்பற்றியது. உங்கள் மீதே அறம் வைத்துப் பாடப்பெற்றது. நாணித் தலைகுனிந்து கோணிக் குறுகுவதுபோல் நாடகமாடுகிருளே இந்தக் கணிகை-இவள்தான் இதை வைத்துக்கொண்டு பாடிக்கொண்டிருந்தாள். ஏடு ஏதென்று கேட்டால் பதிற் கூற மறுக்கிருள். இதை எழுதியது யாரென்று கேட்டால் தெரியாது என்கிருள். எவனே வந்தானும்-ஏதோ சொன்னுனும்-இதை வைத்துவிட்டுப் போனுனும்-இப்படிக் கதையளக்கிருள். நீங்களே இதைக் கேளுங்கள்.

நந்தி:—அமைச்சரே-அந்த ஏட்டைக் கொடுங்கள் இப்படி. பாடல் என்ன சொல்கிறது என்பதை படித்துப் பார்க்கிறேன். அப்புறம் விசாரணையை ஆரம்பிக்கலாம்.

அமைச்சர்:—கூடாது அரசே-இதை நீங்கள் படிக்கவே கூடாது. என் வார்த்தைகளில் கூடவா உங்களுக்கு நம்பிக்கை இல்லை. உங்களை மங்கலச் சொற்களால் புகழ்வதுபோல் அமங்கலப் பொருள் வைத்து இரு பொருள் பட அறம் பாடிய பாடல்கள் இவை. ஏட்டிலிருக்கும் முதற் பாடலிலேயே தனிக் கரியாய் நின்ற மன்னு என்ற அடிகள்-எரிந்து சாம்பலாய்ப்போனவன் என்ற பொருளில்தான் எழுதப்பட்டிருக்கின்றன...ஏடு எப்படிக் கிடைத்தது என்றுமட்டும் இவளிடம் கேளுங்கள். அப்புறம் உண்மைகள் ஒவ்வொன்ருக வெளிவரும் பாருங்கள். [அமைச்சர் குற்றவாளியெனக் கொண்டு வந்து நிறுத்திய அல்லியின் நிலை கண்டு குழப்பமடைகிருன் நந்தி, இந்த விசாரணையால் அவளின் மனமும் நோகும்-மானமும் போகும் என்பது நந்திக்குத் தெரிந்தும்-அவனுல் ஒன்றும் செய்ய முடியவில்லை.]

நந்தி:—பெண்ணே-சிக்கலான இந்த வழக்கை விசாரித்து முடிவு கூற வேண்டிய சிரமமான நிலையில் நான் இருக்கிறேன். என் உணர்வுகளையும் உரிமைகளையும் ஒதுக்கிவிட்டு-பந்தங்களையும் பாசங்களையும் மறந்துவிட்டு-சந்தர்ப்பங்களையும் சாட்சிகளையும் வைத்துத் தீர்ப்பளிக்க வேண்டிய நீதிபதி நான். இந்த நிலைமையிலிருந்து நான் உன்னைக் கேட்கிறேன். ஒளிக்காது மறைக்காது உண்மைகளைச் சொல்லிவிடு. ஏடு உனக்கு எப்படிக் கிடைத்தது. இதை யார் உனக்குத் தந்தது-?

அல்லி:—அரசே-உண்மைகளை ஒளிக்காது மறைக்காது கூறச் சொல்கிறீர்கள் என்னை. கடந்து போன சம்பவங்களையும் நடந்து போன உண்மைகளையும் குறைக்காது மறைக்காது என்னுல் கூறிவிட முடியும். நான் கூறுகிற உண்மைகளால் என் உயிரே போனுலும் அதை நான் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனுல் என் உயிரைவிட மேலாக நான் கருதுகிற இன்னெரு உயிரின் மானமும் புகழும் இதனுல் பாதிக்கப்படும்பொழுது-நான் எந்த உண்மைகளைச் சொல்லி என்னை நிரபராதி என்று நிருபிக்கமுடியும் ?

நந்தி:—முடிவாக நீ என்ன சொல்கிருய் ?

அல்லி:—நான் எதுவுமே சொல்வதற்கில்லையென்று சொல்கிறேன்.

நந்தி:—எனக்கு எதிராக நடந்த சதியில் உனக்கும் பங்குண்டு என்று ஒப்புக் கொள்கிருயா ?

அல்லி:—இல்லை...

நந்தி:—ஏட்டைக் கொடுத்தவன் யாரென்று உன்னுல் காட்டிக்கொடுக்க முடியாதா ?

அல்லி:—முடியாது-காரணம் அவன் யாரென்றும் எங்கே உள்ளவன் என்றும் எனக்குத் தெரியாது...

அமைச்சர்:—அரசே-கள்ளிச் செடியிலிருந்து முல்லை மலரை எதிர்பார்ப்பது போல-இந்தக் கணிகையிடமிருந்து நீங்கள் உண்மைகளை எதிர்பார்க்கிறீர்கள்-குழப்பச் சொற்களைக் கொட்டிக் குதர்க்க வாதமிடுகிற இவளைச் சரியான முறையில் சித்ரவதை செய்தாலொழிய ஒழுங்கான உண்மைகளைப் பெற முடியாது.

நந்தி:—அமைச்சரே-இவளைச் சிறையில் மட்டும் அடைத்து வையுங்கள். மேற்கொண்டு நடக்க வேண்டிய காரியங்களை நானே கவனித்துக்கொள்கிறேன்.

(நந்தி குழப்பத்தோடு எழுந்து உள்ளே செல்கிருன்...அமைச்சரும் ஏனையோரும் மன்னனின் செயலைப் புரிந்துகொள்ள முடியாது திகைத்து நிற்கின்றனர். அல்லி சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்படுகிருள்.)

**அடுத்த இதழில் முடியும்**


தைத் திங்களில் வெளிவருகிறது !
தென்புலத்தின் விடுதலை முரசம் !
திராவிடரின் போர்க் கேடயம் !!

**முன்னணி**

-கலை, இலக்கிய, அரசியல்.......வார ஏடு-

ஆசிரியர் : பி. வி. முத்துசுவாமி

பதிப்பாசிரியர் : ம. ரா. தேவராசன்

தென்னகத்தின் முன்னணி எழுத்தாளர்கள் அனைவரும் தொடர்ந்து எழுதுவார்கள்.

ஒவ்வொரு இதழிலும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், அரசியல் விமர்சனங்கள், கலை உலகச் செய்திகள் அனைத்துமே 'முன்னணி'யை எழில் படுத்தும்.

தனிப் பிரதி 16 காசுகள் ★ ஆண்டுச் சந்தா ரூ. 8-00

உங்கள் பிரதிக்கு இன்றே பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விபரங்கட்கு:
முன்னணி அலுவலகம்
26, எம். சி. ரோடு, சென்னை-21.

# அரசியல்

பெஸ்கி முகம்மது எம். ஏ.

ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகை ஆட்சி அமைப்பு முறையைத் தன்னகத்தே கொண்டுளளது. இந்தியா ஜனநாயக ஆட்சி முறையைக் கொண்டுள்ளது. இங்கிலாந்து சட்டத்திற்குட்பட்ட மன்னராட்சி (Constitutional Monarchy) முறையைக் கொண்டுள்ளது. ரஷ்யா எதேச்சதிகார ஆட்சி முறையைக் கொண்டுள்ளது. இப்படி ஒவ்வொரு நாடும் தனது சூழ்நிலை வசதிகளுக்கேற்ப தங்கள் தங்கள் ஆட்சி முறைகளை வகுத்துக்கொண்டிருக்கின்றன. பண்டைக் கிரேக்கத்தில் வாழ்ந்த அரசியல் அறிஞன் அரிஸ்டாட்டில் ஆட்சி அமைப்பு முறைகளை மூன்று பிரிவாகப் பிரித்திருக்கிறான். தன்னுடைய ஆசிரியனான பிளேட்டோவின் அரசியல் கருத்துக்களிலிருந்து அதை எடுத்திருக்கிறான். பிளேட்டோ தன்னுடைய ஆசிரியனான சாக்ரடீஸிடமிருந்து அரசியல் வரலாறை கற்றுக் கொண்டான். அரிஸ்டார்டில் கூறுகிற மூன்று பிரிவுகள், மன்னராட்சி (Monarchy) திறமையுள்ள ஒரு சிலரின் ஆட்சி முறை (Aristo Cracy) பலரின் ஆட்சி முறை அதாவது, Polity என்று அழைக்கப்படுவது.

நாட்டில் உள்ள சகல அதிகாரங்களும் தனி மனிதன் ஒருவன் கையில் ஒப்படைக்கப்பட்டால், அது மன்னராட்சி என்று அழைக்கப்படுகிறது. மன்னன் ஒருவனுக்கே சட்டத்தை இயற்றவும் நீக்கவும் அதிகாரம் இருக்கிறது அவன் தன்னுடைய மனம் போனபடி ஆட்சி நடத்தலாம். நாட்டிலுள்ள சகல அதிகாரங்களும் ஒரு சில செல்வந்தர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டால் அது "அரிஸ்டாக்கிரசி" என்று அழைக்கப்படுகிறது. அந்த நாட்டின் தலைவிதி ஒரு சிலரின் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது சகல அதிகாரங்களும் பல பேர் கையில் ஒப்படைக்கப்பட்டால், அது "பாலிட்டி" என அழைக்கப்படுகிறது எந்த ஒரு நாட்டிலும் இந்தமூன்று வித அரசாங்க அமைப்பு முறைகளில் ஏதாவது ஒன்றுதான் இருக்கமுடியும். இந்த அரசாங்கங்கள் சாதாரண நிலையிலிருந்து (Narmal state) மாறுபட்ட நிலைக்கு (Perverted form) செல்லுகின்றபொழுது புதிய அரசியல் அமைப்பு முறைகள் உண்டாகின்றன என்று அரிஸ்டாட்டில் கூறுகிறார். சாதாரண நிலை என்றால் என்ன என்று பார்ப்போம். இந்த மூன்றுவித பிரிவுகளின் நோக்கம் ஒன்றுதான். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும், மக்கள் நல்வாழ்விற்கு வசதி, வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும். மக்களுக்காகத்தான் அரசாங்கம் என்பதுதான் இம்மூன்று பிரிவுகளின் நோக்கம். மக்கள் நல்வாழ்வை எப்பொழுதும் கவனித்துக்கொண்டேயிருந்தால், மக்கள் தீ மானத்திற்கு விரோதமாக இல்லாது அவர்களுக்கு ஆதரவாகவே இருந்தால் அதை சாதாரண நிலை என்று அழைக்கிறார் அரிஸ்டாட்டில். மக்கள் நலனுக்கு விரோதமாகவோ அல்லது மக்கள் தீர்மானத்திற்கு விரோதமாகவோ இம்மூன்று வித அரசாங்கங்களில் ஏதாவது ஒன்று செய்யுமாயின் அது தன்னுடைய சாதாரண நிலையிலிருந்து மாறுபட்ட நிலைக்கு வந்துவிடுகிறது என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். மன்னன் தன் சுயநலத்திற்கு அதிகாரங்களை பயன்படுத்துவானேயானால் மன்னராட்சி முறை சாதாரண நிலையிலிருந்து மாறுபட்ட நிலைக்கு வந்துவிடுகிறது. அப்படி அவன் தன் மனம்போல் தன்னலத்திற்காக ஆட்சி செய்கின்றபொழுது, மன்னராட்சி முறை சர்வாதிகார ஆட்சி முறையாக அல்லது எதேச்சதிகார ஆட்சி முறையாக (Tyranny) மாறுபட்ட நிலையை அடைகிறது. அதுபோல, ஒரு சிலர் ஆட்சி செய்யும்பொழுது தங்களுடைய சுயநலத்திற்காக அதிகாரங்களை பயன்படுத்துவார்களேயானால் அது ஆலிகார்க்கி (Oligarchy) என்று அழைக்கப்படுகிறது. அதுபோல் பல பேர் ஆளுகின்றபொழுது (Polity) பொதுமக்கள் நலனைப் புறக்கணித்து தங்கள் சுயநலத்திற்கு சட்டங்களை பயன்படுத்துவார்களேயானால் அது ஜனநாயகம் (Demo Cracy) என்று அழைக்கப்படுகிறது. ஜனநாயகம்தான் சிறந்த ஆட்சி அமைப்பு முறை என்று நாம் கருதுகிறோம். ஆனால் மக்களாட்சியை ஒரு கும்பலின் ஆட்சி (Mob sule) என்று கருதி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் அறிவு இல்லாத பலர் தங்கள் நன்மைகளுக்காக சுயநலத்திற்காக ஆளுகின்ற முறையைத்தான் ஜனநாயகம் என்று அரிஸ்டாட்டில் அழைக்கிறான்.

இம்மூன்று சாதாரண நிலையும் மாறுபட்ட நிலையும் எந்த நாட்டிலும் ஏற்படும் என்று அரிஸ்டாட்டில் கூறுகிறான். எவ்வாறு ஒரு சக்கரம் சுற்றி வருகிறதோ அதுபோல் இம்மூன்று அமைப்பு முறைகளும் ஒரு நாட்டை சுற்றி வரும். ஆரம்ப நிலை மன்னராட்சி முறையில் துவங்குகிறது என்கிறான். தனி மனிதன் மன்னரானவுடன் முதன் முதலில் மக்கள் நன்மையையே நாடுகிறான். நாளடைவில் மக்கள் நலனை மறந்து தன் சுயநலத்திற்கு அடிமையாக மாறி தன் எண்ணம் போல் ஆட்சி நடத்துகிறான். மக்கள் நன்மையை மன்னன் புறக்கணிப்பதைக் கண்ட ஒரு சில திறமைசாலிகள் மன்னரை ஒழித்துவிட்டு தாங்கள் ஆட்சி பீடத்தில் அமருகின்றனர். இது இரண்டாவது பிரிவு. ஆரம்பத்தில் இந்த ஒரு சிலர் மக்கள் நலனிலே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். ஆனால் நாளடைவில் அவர்களும் மக்கள் நலனை மறந்து தங்கள் சுயநலத்திற்கு அதிகாரங்களை பயன்படுத்துகின்றனர். தங்கள் நலனுக்கு விரோதமாக ஒரு சிலரின் நலனுக்கே ஆட்சி ஆதரவாக இருப்பதைக் கண்ணுற்ற மக்கள் இந்த ஆட்சி முறைக்கு எதிராகக் கிளம்பி அதை ஒழித்துவிட்டு தங்களில் பல பேர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்கின்றனர். ஆனால் மக்களில் பெரும்பாலோர் அரசியல் அறிவு அற்றவர்கள், சுலநலமிகள் என்பது அரிஸ்டாட்டில் கருத்து. எனவே மக்கள் ஆட்சி முறை நிலையாக ஒழுங்காக அமைதியாக இருக்கமுடியாது. இந்த சமயத்தில் ராணுவ பலமிக்க தனி மனிதன் ஒருவன் தன்னுடைய ராணுவத்தின் துணைகொண்டு அந்த ஆட்சியை அழித்துவிட்டு மன்னராட்சிமுறையை ஏற்படுத்துவான். அதாவது அவனே தன்னுடைய அதிகாரத்தின் மூலம் மன்னனாவான். மன்னராட்சி முறையில் ஆரம்பமாகி மீண்டும் மன்னராட்சி முறைக்கே வந்து, மறுபடியும் மற்ற இரண்டு மாற்றங்களுக்கு உள்ளாகிறது. இதைத்தான் அரிஸ்டாட்டிலின் அரசியல் மாற்றச் சக்கரம் (Cycle of Aristotles Political Change) என்று குறிப்பிடுகின்றனர். எனவே ஒவ்வொரு நாடும் இம்மூன்று வித ஆட்சி அமைப்பு முறைகளுக்கு உட்படுகிறது என்பது அரிஸ்டாட்டலின் தீர்ப்பு. இம்மூன்றுவித ஆட்சி அமைப்பு முறைகள் அல்லாது வேறு சில ஆட்சி அமைப்புகளும்தற்காலத்தில் இருக்கின்றன. பண்டைக்காலத்தில் இம்மூன்று முறைகள் மட்டுமே இருந்ததினால் மூன்று அமைப்பு முறைகள்தான் உண்டு என்று அரிஸ்டாட்டில் கூறுகிறார். ஆனால் இன்று இம்மூன்று தவிர சட்டத்திற்குட்பட்ட மன்னராட்சி முறை இங்கிலாந்தில் இருக்கிறது. யூனிட்டரி அரசாங்கம் (Unitary) இருக்கிறது. கூட்டாட்சி அரசாங்கம், அதாவது பெடரல் (Federal) அரசாங்கம் இந்தியாவில் இருக்கிறது. ஜனாதிபதி அரசாங்கம் அதாவது ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்கள் உள்ள (Presidential Type) அமெரிக்காவில் இருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் அரிஸ்டாட்டில் எழுதாதற்குக் காரணம், அவர் வாழ்ந்த காலத்தில் இதுபோன்ற புது அமைப்பு முறைகள் கிடையாது. இனி அரிஸ்டாட்டில் கூறிய மூன்று பிரிவுகளில் ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பார்ப்போம்.

**மன்னராட்சி முறை** (Monarchy) சகல அரசியல் அதிகாரங்களும் மன்னனாகிய ஒரு தனி மனிதனின் கையில் இருந்தது. மன்னன் இட்டதே சட்டம். எந்தப் பிரச்னையை எடுத்துக் கொண்டாலும் மன்னனுக்கே சகல அதிகாரங்களும் இருந்தன. அரசாங்க அலுவலர்கள் அனைவரும் மன்னனால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களை வேலையிலிருந்து நீக்கவோ வைத்திருக்கவோ மன்னனுக்கே அதிகாரம் இருந்தது. இதுவே ஆரம்பகாலத்தில் மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டு வந்தது. காரணம்மன்னராட்சி முறையில் ஒரு தனி மனிதன் கையில் சகல அதிகாரங்களும் இருந்ததினால் அவன் திறமையாளனாக இருந்தால் ஆட்சி முறை செவ்வனே நடைபெற்றது. பலவித கருத்துக்களுக்கு மத்தியில் அவன் தடுமாறவில்லை. ஒரே குறிக்கோளுக்காக ஆட்சி நடத்தினான். மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை ஊட்ட முடிந்தது. சட்டத்தை உண்டாக்கியவன் மன்னன். குற்றங்களை விசாரித்து தீர்ப்பு வழங்குகிறவனும் மன்னன். ஆட்சி முறையை நடத்துகிறவனும் மன்னன். எனவே (Unity) என்று சொல்லப்படுகிற ஒற்றுமை இருந்தது. காலதாமதம் எதிலும் ஏற்பட வழியில்லை. ஆரம்ப காலத்தில் மன்னன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டான். தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு மன்னனுடைய பரம்பரையே அரசுரிமையை அனுபவித்து வந்தது. மன்னன் இறந்தவுடன் அவனது மகன், அவனுக்குப் பிறகு அவனது மகன். இப்படியாக அரசுரிமைக்கு பரம்பரை உரிமை கொண்டாடப்பட்டது. கல்வியறிவு இல்லாத மக்களை ஒழுங்கான முறையில் கொண்டு செல்வதற்கு மன்னனால்தான் முடியும். இத்தாலியில் அரசியல் அறிஞன் மாக்கியவல்லி குடியரசு ஆட்சி முறையை வானளாவப் புகழ்ந்து பேசுகிறான். ஆனால் அதே சமயத்தில் சீர்கேடடைந்து, ஒழுக்கம் இன்றி, ஒற்றுமையின்றி ஜாதி மத பேதங்களால் பிரிவுபட்டு இருக்கின்ற ஒரு சமுதாயத்தில் ஜனநாயகமோ, குடியரசு ஆட்சி முறையோ வெற்றி பெறாது என்று ஆணித்தரமாகக் கூறுகிறான். சீர்கெட்ட சமுதாயத்தை திருத்தி செம்மைப்படுத்தி நல்லதொரு ஆட்சி முறையை ஏற்படுத்த பலமான வலிமை மிகுந்த சர்வாதிகார மன்னன் ஒருவனால்தான் முடியும். ஆகவே அத்தகைய சமுதாயம் உள்ள ஒரு நாட்டில் மன்னராட்சி முறைதான் சிறந்த பலனைத்தரும், என்று மாக்கியவல்லி கூறுகிறான். மன்னராட்சி முறை எப்பொழுதுமே சிறந்த ஆட்சி முறையாக இருக்கும் என நாம்எதிர்பார்க்க முடியாது. மன்னன்நல்லவனாக இருந்தால் மக்கள் நலனை பெரிதும் பேணுவான். மன்னன் தீயவனாக இருந்தாலோ சர்வாதிகார ஆட்சி முறையை நடத்துவான். வரலாற்றை நாம் புரட்டிப் பார்த்தால் பெரும்பாலான மன்னர்கள் சர்வாதிகாரிகளாக சாம்ராஜ்ய வெறிபிடித்தவர்களாகத்தான் காட்சியளிக்கின்றனர். பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு பிரான்சை ஆட்சி செலுத்தி வந்த 14-ம் லூயி என்ற மன்னன் மிகப் பெரிய சர்வாதிகாரியாக வாழ்ந்தான். "நான்தான் நாடு. என் சுகம்தான் நாட்டினர் சுகம்" என்று 'தான்' என்ற வெறிபிடித்து அலைந்தான் 14-ம்லூயி மன்னன். நாளடைவில் மன்னர்கள் தங்களை 'கடவுளின் வாரிசு' என்று சொல்லிக் கொள்ள ஆரம்பித்தனர். நாட்டு மக்களை ஆள்வதற்காக கடவுள் மன்னனை பூவுலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். மன்னன் மகேஸ்வரன் பிள்ளை. அவன் என்ன குற்றம் புரிந்தாலும் என்ன தீமைகள் தொல்லைகள் இடையூறுகள் தந்தாலும் அதைத் தட்டிக் கேட்கும் உரிமை மக்களுக்குக் கிடையாது. கடவுள் ஒருவருக்குத்தான் அந்த உரிமை உண்டு," என்று தங்கள் அக்ரமத்திற்கும் சுரண்டல் கொள்கைகளுக்கும் கடவுள் திரை போட்டு மறைந்தனர் மன்னர்கள். எனவே கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 16-ம் நூற்றாண்டுவரை ஐரோப்பாவையும் இங்கிலாந்தையும் ஆண்டு வந்த மன்னர்கள் தங்களை ஆண்டவன் அவன் வாரிசாக அனுப்பியதாகக் கூறிக்கொண்டு எதேச்சதிகார ஆட்சி முறையை நடத்தினர். தட்டிக் கேட்க யாருமிலர் என்ற தைரியத்தில் தகாத வழிகளைப் பின்பற்றினர்; நாளடைவில் மக்கள் விழித்துக்கொண்டனர்.

**சட்டத்திற்குட்பட்ட மன்னராட்சி**

மன்னராட்சி முறையில் சட்டத்திற்குட்பட்ட மன்னராட்சி முறை என்று ஒன்று இருக்கிறது. மன்னர் நாட்டிற்கு தலைவனாக இருப்பான். ஆனால் சகல அதிகாரங்களும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காபினட் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கும். உதாரணமாக இங்கிலாந்தை எடுத்துக்கொள்வோம். இங்கிலாந்தில் இன்றும் மன்னராட்சி முறை இருக்கிறது. ஆனால் இன்றைய தினம் இங்கிலாந்தை ஆளுகிற ரர்ணி பெயருக்குத்தான் இராணியே தவிர உண்மையான சகல அதிகாரங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் அடங்கிய பிரதம மந்திரியை தலைவராக உள்ள காபினட் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் மன்னர் எதற்கு? மன்னர் தேவையில்லையே என்று பலர் வினாவெழுப்பலாம். ஆனால் இங்கிலாந்து நாட்டு மக்கள், மன்னர் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் பற்றும் பாசமும் கொண்டவர்கள். இங்கிலாந்து மக்கள் பழமையில் அதிக நம்பிக்கையுடைவர்கள். அவர்களை திருத்துவது மிகவும் கடினமான ஒரு செயல். மன்னனை தெய்வத்திற்குச் சமமாக இன்றும் வைத்து வணங்குகிறார்கள். ஆனால் மன்னன் அரசியலில் தலையிடமாட்டான். அரசியலுக்கு அப்பாற்பட்டவன் மன்னவன். எந்த ஆட்சி பீடத்தில் அமருகிறதோ அந்த கட்சியின் திட்டங்களுக்கு விரோதமாக மன்னன் எதுவும் செய்யமுடியாது. கிழக்கத்திய நாடுகளில் ஜப்பானில் இதுபோன்ற சட்டத்திற்குட்பட்ட மன்னராட்சி முறை இருக்கிறது. ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில் பெரும்பாலான நாடுகளில் மன்னராட்சி முறை ஒழிந்து மக்களாட்சி முறை மலர்ந்திருக்கிறது. காரணம் காலத்தின் வேகத்தில் சமுதாயத்தில் ஏற்படுகின்ற மாற்றம் அதுபோன்ற அரசியல் அமைப்பு முறைகளுக்கு ஆதரவாக இல்லை.

(தொடரும்)

# வெண்பாப் போட்டி

## திருக்குறள் தென்றல் வெண்பா !

தாயகத்தில் இந்தி தழைக்கவழி செய்பவரை
நாயகராய் நம்பற்க தென்றலே !- தீய
'பழுதெண்ணும் மந்திரி'யின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்.

— சா. கா. சாகுல்அமீது, சித்தையன்கோட்டை.

நாடும் மொழியும் நம்உயிராம் எண்றெண்ணிப்
பாடுபடும் நல்லவரை பார்த்தெடுப்பீர் - தேடிமிக
இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

— பண் வே. ஜீவா, திருநாவலூர்.

அடுக்கு மொழிபேச ஆர்வமீக் கூர்ந்து
தடுக்கு மொழிவீசிச் சாம்புவார் - தண்தென்றல் !
கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

— முத்துமொழியன், கொத்தங்குளம்.

பண்டார நாயகாவைப் பார்ப்பதுபோல் வந்தொருவன்
குண்டாலே சுட்டுக் கொலைசெய்தான் - தென்றல் !
தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

— அர. இராசாராமன், வளவனூர்.

தென்றல் புயலாமுன் சென்னை தமிழ்நாடே
என்றுதல் நன்றும் எனஉரைப்பாய் - தென்றலே
தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

— இரட்டையர், உடுமலை.

கட்டபொம்மு வீரனைக் காட்டிக் கொடுத்திட்ட
எட்டப்பன் செய்கை எவரறியார் ?-தென்றலே !
வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

— கு. கந்தப்பன், மருங்கூர்.

தென்னவரைத் தாழ்த்தியுரை சொன்னதனால் சென்னிகள்தான்
கன்மலையைத் தாங்கினதும் கண்டாரே - தென்றலே !
யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

— வ. தமிழரசு, சென்னை-12.

நேருவின் வன்சொலால் நேர்ந்த நெடும்புண்கள்
தீராமல் நோகின்றோம் தென்றலே !- தேராரோ ?
தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

— ப. அ. இசுமாயில், திருப்புத்தூர்.

தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலனென்று
வீழ்ந்திட்டான் தென்றலே ! வீரமுடன் - பாழாய்
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

—அ. சுப்பிரமணியன், திருப்பாலப்பந்தல்.

வண்ணத் தமிழ்நிலவை மாசுவந்து சூழுதடா
இன்னுமா ? கண்ணுறக்கம்! ஏன்தமிழா ! - மண்ணில்
இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் !

— இரெ. இராசாராம், தாடிக்கொம்பு.


# தென்றல்

## பொங்கல் மலர் 1961

மிகச் சிறப்பாகத் தயாராகிறது.

- அறிஞர் அண்ணா
- நாவலர் நெடுஞ்செழியன்
- சொல்லின் செல்வர் சம்பத்
- பேராசிரியர் அன்பழகன்
- சிந்தனைச் சிற்பி சிற்றரசு
- கே. ஏ. மதியழகன்
- க. அறிவழகன்
- தில்லை வில்லாளன்
- பன்மொழிப்புலவர் அப்பாதுரையார்
- டாக்டர் மு. வரதராசனார்
- டாக்டர் சிதம்பரநாதனார்
- டாக்டர் இராசமாணிக்கனார்
- தேவநேயப் பாவாணர்
- அ. மு. பரமசிவானந்தம்
- வாணிதாசன்
- முடியரசன்
- கம்பதாசன்
- இராதாமணாளன்
- எஸ். எஸ். தென்னரசு
- பி. சி. கணேசன்
- மா. தங்கவேலர்
- நா. பாண்டுரங்கன்
- அரு. ராமனாதன்
- அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி
- மெ. சுந்தரம்
- பேராசிரியர் மா. கி. தசரதன்
- இசையரசு தண்டபாணி தேசிகர்
- தமிழண்ணல்
- மா. சு. சம்பந்தன்
- தமிழ்ப்பித்தன்.

ஆகியோரின் நெஞ்சை அள்ளும் எழுத்தோவியங்கள் இடம் பெறுகின்றன.

அறிஞர் அண்ணா, சொற்செல்வர் ஆகியோரின் படங்கள் ஆர்ட் தாளில் அழகுற அச்சாகிறது.

'மாங்கனி' இசைப்பாடலுக்குத் தேன்கனி
விஜயலட்சுமி தரும் 'நாட்டிய முத்திரை'
கண்ணுக்கு விருந்தாக அமைகிறது.

ஆசிரியர் கண்ணதாசன் எழுதும்
கவிதை, சிறுகதை, தத்துவக் கட்டுரை
மலருக்கு மகுடம் சேர்ப்பவை.

# விலை ரூபாய் 2.

தென்றல் சென்னை-6.